IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.22/2006 c/w OS.No.304/2004**

Deposition of witness for the Plaintiff/PW1

Name :Sivakumar Date: 27 .02.2023

Father's Name :

**<u>1 முதல் 3 மற்றும் 7 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு எனது மனைவி அம்பிகா தாக்கல் செய்துள்ளார். இரண்டு வாரத்திற்கு முன்னர் நேமம் கிராமத்தில் எல்லப்பன் குடும்ப நிகழச்சியில் எனது மனைவியும் மகனும் கலந்து கொண்டார்கள். எனக்கு 1973ல் திருமணம் நடைபெற்றது. 1973க்கு முன்னர் எனது மாமியார் வீட்டு விவகாரங்கள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அந்த விவகாரங்கள் எனது மனைவிக்கு தெரியும். இந்த வழக்கில் வாதியான எனது மனைவி வராமல் நான் அவருக்காக சாட்சியம் அளிப்பதற்கான நோக்கம் என்னவென்றால் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஆதலால் அவரால் வர இயலவில்லை. அதற்கு ஆதாரமாக மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து ஆணையாளர் மூலம் எனது மனைவியை விசாரிக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் எனது மனைவி நேரடியாக விசாரிக்கப்பட்டால் உண்மை தெரிந்துவிடும் என்றும், அந்த உண்மையை மறைப்பதற்காக தான் என்றும் சொன்னால் சரியல்ல. வாதியின் தாயார் பெயர் பாலம்மாள். பாலம்மாளின் கணவர் பெயர் துரைசாமி முதலியார். பாலம்மாளின் சகோதரி பெயர் மாணிக்கம்மாள். மாணிக்கம்மாளின் கணவர் பெயர் சுப்பரமணி முதலியார். மாணிக்கம்மாளின் மற்றொரு சகோதரியின் பெயர் வடிவாம்பாள். மாணிக்கம்மாளினுடைய சொத்துக்கள் நேமம் கிராமத்தில் உள்ளது. மாணிக்கம்மாள் மற்றும் அவரது கணவர் சுப்பரமணிய முதலியார் ஆகியோருக்கு சேர்த்து 22 1/2 ஏக்கர் சொத்து இருந்தது. துரைசாமி முதலியார் மற்றும் பாலம்மாள் ஆகியோருக்கு நேமம் கிராமத்தில் 4 1/2 ஏக்கர் நிலமும் ஒரு வீடும், கோவூர்

கிராமத்தில் ஒரு மனையும் இருந்தது. இந்த சொத்துக்கள் அவர்களின் பூர்வீக சொத்துக்கள். வடிவாம்பாள் பரணிபுத்தூர் கிராமத்தில் வசித்து வந்தார். அவரின் கணவர் திருநாவுக்கரசு காலமாகிவிட்டார். அப்போது வடிவாம்பாளின் வயது என்னவிருக்கும் என்றால் எனக்கு தெரியாது. வடிவாம்பாளுக்கு சொத்துக்கள் இருந்தது என்றும், அதை அவரால் பராமரிக்க முடியாத நிலையில் இருந்ததால் எனது மாமியாரும் மாமனாரும் வடிவாம்பாளுடன் இருந்து அச்சொத்துக்களை பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது மனைவி அப்போது தான் 10வருடம் படித்து வந்தார் என்றால் எத்தனை வருடம் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் படித்து வந்தார். எனது மனைவியும் மாமியாரும் சென்னை தம்புசெட்டி தெருவில் குடியிருந்து வந்தார்கள் என்றால் எனது மனைவி அங்கு இருந்தது தெரியும். என் மனைவியின் அண்ணனான கருணாகரன் அந்த வீட்டில் இருந்து வந்தார். கருணாகரன் அந்த வீட்டிலிருந்து எலக்ட்ரிகல் மோட்டார்கள் மற்றும் பொருட்கள் வியாபாரம் செய்து வந்தார் என்றால் அவ்வாறு அவர் செய்து வந்தது 1973க்கு பின்னர் எனக்கு தெரியும். 1973ல் எனக்கு திருமணமான பின்னர் தம்புசெட்டி தெரு வீட்டிற்கு நான் வியாபார நிமித்தமாக அடிக்கடி சென்றுள்ளேன். சுப்பரமணிய முதலியாரும் மாணிக்கம்மாளும் கருணாகரனை வளர்ப்பு மகனாக வளர்த்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த விவரம் எனது மனைவிக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியும். எனது மனைவி இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட உள்ளாரா என்றால் இல்லை. சுப்பரமணிய முதலியாரும் மாணிக்கம்மாளும் நேமம் கிராமத்தில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். மேலும் பாலம்மாளும் அவரது கணவர் துரைசாமியும் பரணிபுத்தூர் கிராமத்தில் 20வருடங்கள் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் சுமார் 1 வருடம் அங்கு வசித்து வந்தார்கள். இந்த வழக்கில் சுப்பிரமணிய முதலியார் மற்றும் மாணிக்கம்மாள் ஆகியோரின் சொத்துக்களில் பங்கு கேட்டுள்ளோம் என்றால் சரிதான். சுப்பிரமணிய முதலியாருக்கு சகோதரர்கள் உள்ளனர். இந்த வழக்கு விவரங்களை நானும் எனது மனைவியும் கூறி அதன் பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுப்பிரமணிய முதலியார் மற்றும் மாணிக்கம்மாள் ஆகியோரின் வளர்ப்பு மகள் எனது மனைவி என்ற ஓதாவில் அவர்களின் சொத்துக்களில் பங்கு கேட்டுள்ளார். வேறு அடிப்படையில் எனது மனைவி அவர்களின் சொத்துக்களில் பங்கு கோரவில்லை. பாலம்மாள் குடும்பமும் மாணிக்கம்மாள் குடும்பமும் இணைந்த குடும்பங்கள் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது அவர்களின் இரண்டு குடும்பங்களும்

கூட்டு குடும்பங்களாக வசித்து வந்தன. இரண்டு குடும்பங்களின் சொத்துக்களையும் இரண்டு குடும்பத்தினரும் சமமாக எடுத்துக்கொள்ளலாம் என்று எழுத்துபூர்வமாக எதுவும் ஏற்பட்டதா என்றால் இல்லை. திருவள்ளூர் மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியவற்றில் முதலியார்கள் குடும்பங்கள் நிறைய உள்ளது. எனக்கு தெரிந்து மேற்கூறிய மூன்று மாவட்டங்களிலும் இணைந்த குடும்பம் என்ற முறை நிகழ்வில் உள்ளதாக ஏதாவது குடும்பம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. இணைந்த குடும்பம் என்ற concept முதலியார் குடும்பங்களில் எந்த காலக்கட்டத்திலும் நடைமுறையில் இல்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்கூறிய concept தமிழ்நாடு, ஆந்திரா எல்லை பகுதிகளில் தான் ரெட்டியார் மற்றும் நாயுடு குடும்பங்களில் உள்ளது என்றும், முதலியார் குடும்பங்களில் கிடையாது என்றும் சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. சுப்பிரமணிய முதலியார் மற்றும் மாணிக்கமாளுக்கு சொந்தமான சொத்துக்களை கருணாகரன் அனுபவித்து அதன் பின்னர் அவரது மகனான திருநீலகண்டன் அடைய வேண்டும் என்று செட்டில்மென்ட் பத்திரம் எழுதப்பட்டுள்ளது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).